بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 04/10/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## அகழ்ப் போரின் பின்னணியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்

### உலகின் நிலைமைகள், பாக்கிஸ்தான் மற்றும் வங்காள தேசத்தின் அஹ்மதிகளுக்காக துஆக்களுக்கான வலியுறுத்தல்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَاِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَلَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இன்றைய நாள்களில் குத்பாக்களில் அகழ்ப் போர் பற்றி கூறப்பட்டு வருகிறது. **அகழ்ப் போர் குறித்த மேலும் விபரம்** இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது: அகழைத் தாண்டிய பிறகும் இணைவைப்பாளர்களுக்கு எந்த வெற்றியும் கிடைக்கவில்லை; கடுமையான தோல்வியை எதிர்கொள்ள வேண்டி வந்தது. எனவே, அனைவரும் ஒன்று சேர்ந்து காலையில் தாக்குதல் தொடுக்கலாம் என்பதில் அவர்கள் ஒன்று பட்டார்கள். காலையில் எல்லாரும் சேர்ந்து அகழை சூழ்ந்து கொண்டார்கள். அகழைத் தாண்டுவதற்கு மீண்டும் மீண்டும் முயற்சி செய்ததுடன் சேர்த்து கடுமையான அம்பு எய்தும் போரும் நடந்தது. முஸ்லிம்கள் தரப்பிலிருந்து ஏதாவது கவனக்குறைவு ஏற்படாதா என நிராகரிப்பாளர்கள் காத்திருந்தனர். இந்தத் தாக்குதல்களும் முயற்சிகளும் அவ்வப்போது நடந்து வந்தன.

இதே கட்டத்தில்தான் வஹ்ஷீ பின் ஹர்ப் என்பவர் துஃபைல் பின் நுஃமான் அவர்களையோ அல்லது துஃபைல் பின் மாலிக் பின் நுஃமான் அன்ஸாரீ அவர்களையோ தனது சிறிய ஈட்டியால் குத்தி ஷஹீது ஆக்கி விட்டார். ஹஸ்ரத் சஃது பின் முஆஸ் (ரலி) அவர்கள் மீதும் அம்பு பட்டது. அவர்களும் காயமுற்றார்கள். அதே காயத்தினால் சில நாள்களுக்குப் பிறகு அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். **இந்த நாளில்தான் கடுமையான பணி நெருக்கடி மற்றும் மீண்டும் மீண்டும் நடந்த தாக்குதலின் காரணத்தினால் முஸ்லிம்களுக்குத் தொழுகையையும் அதற்குரிய நேரத்தில் தொழுவது சிரமமாகி விட்டது.** அன்றைய நாள் முஸ்லிம்கள் தொழுகைகளையோ தொழுது வந்தார்கள்தான்; ஆனால், ஒரு தொடர்ச்சியான அச்சம் மற்றும் கவலையின் நிலையில் தொழுகைகள் நிறைவேற்றப்பட்டன. அஸ்ர் நேரத்தில் கடுமையான தாக்குதல் காரணமாக அஸ்ர் தொழுகை நெருக்கடியான நேரத்தில் தொழப்பட்டது.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** அப்பொழுது வரை அச்சத் தொழுகை ஷரீஅத்தில் வந்திருக்கவில்லை. எனவே, தொடர்ச்சியான ஆபத்து மற்றும் பணி நெருக்கடியின் காரணத்தினால், ஒரு தொழுகை மட்டும், அதாவது, அஸ்ர் தாமதமாகி விட்டிருந்தது. அது மக்ரிபுடன் இணைத்து தொழப்பட்டது. சில அறிவிப்புகள் அடிப்படையில், ளுஹர் மற்றும் அஸ்ர் தொழுகை காலம் கடந்து நிறைவேற்றப்பட்டன.

**தொழுகைகள் குறித்த நேரத்தில் நிறைவேற்றப்படாதது குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அதனால் எவ்வளவு பெருந்துயரம் ஏற்பட்டது என்றால், அன்னார், ‘இறைவன் நிராகரிப்பாளர்களுக்குத் தண்டனை வழங்குவானாக! அவர்கள் நம்முடைய தொழுகைகளை இழக்கச் செய்து விட்டார்கள்’ என்று கூறினார்கள். இதிலிருந்து ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம் பெரிதும் ஒளி வீசுகிறது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இறைவனை வணங்குவதே உலகில் எல்லாவற்றையும் விட மிகப் பிடித்தமான விஷயமாக இருந்திருக்கிறது என்பது தெரியவருகிறது.

**நீதி நெறி தீர்ப்பவரான சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், எல்லாத் தொழுகைகளையும் இரவு நேரத்தில் நிறைவேற்றியதாக கூறப்பட்டுள்ள எல்லா அறிவிப்புகளையும் பலவீனமானவை என்று கூறியுள்ளார்கள்.** நம்பகமான எந்த ஹதீஸிலும் நான்கு (தொழுகைகள்) ஜம்உ செய்யப்பட்டதாகக் கூறப்படவில்லை. சஹீஹ் புகாரியின் விளக்கவுரையான ஃபத்ஹுல் பாரீ என்ற நூலில் எழுதப்பட்டுள்ளது: ஒரு தொழுகை, அதாவது, அஸ்ர் தொழுகை வழக்கத்தை விடவும் நெருக்கடியான நேரத்தில் தொழப்பட்டது. இந்த அளவுதான் நடந்தது.

**ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் திங்கள், செவ்வாய் மற்றும் புதன் ஆகிய கிழமைகளில் ளுஹருக்கும் அஸ்ருக்கும் இடைப்பட்ட நேரத்தில் வருகை தந்தார்கள். தமது மேற் போர்வையை வைத்து விட்டு, கைகளை உயர்த்தி அந்தக் கூட்டங்களுக்காக பத் துஆ (தண்டனைக்கான துஆ) செய்தார்கள். ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முகத்தில் மகிழ்ச்சியை அடையாளம் கண்டு கொண்டோம்.

ஓர் அறிவிப்பில் வருகிறது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் எதிரியுடன் மோத ஆசைப்படாதீர்கள். இறைவனிடம் நலத்தை நாடுங்கள். ஆனால், நீங்கள் எதிரியுடன் மோத நேரிட்டால், பிறகு பொறுமை காத்திடுங்கள். மேலும், சொர்க்கம் வாள்களின் நிழல்களின் கீழ் உள்ளது என்பதை அறிந்திடுங்கள். பிறகு அன்னார் இவ்வாறு துஆ செய்தார்கள்: “அல்லாஹ்வே! மறையை இறக்கியோனே! விரைவாக கணக்கு வழக்கு தீர்ப்போனே! படைகளைத் தோல்வியடைச் செய்வாயாக! அல்லாஹ்வே! அவர்களுக்குத் தோல்வியை வழங்குவாயாக! அவர்களுக்கு எதிராக எங்களுக்கு

உதவி புரிவாயாக!” மற்றோர் அறிவிப்பில் இந்த துஆவும் கூறப்பட்டுள்ளது: “அல்லாஹ்வே! நான் உன்னிடம் நீ அளித்த உறுதி மற்றும் உனது வாக்குறுதியை முன்னிறுத்தி கேட்கிறேன், அல்லாஹ்வே! நீ நாடினால் உன்னை வணங்கப்பட மாட்டாது.”

**ஹஸ்ரத் அபூ ஸயீது குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:-** நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} இதயம் தொண்டையை அடைத்து விட்டது. நாங்கள் சொல்வதற்கு சொற்கள் ஏதும் இருக்கின்றனவா?’ என்று பணிவுடன் கேட்டோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நீங்கள் இவ்வாறு துஆ செய்யுங்கள் என்று கூறினார்கள்: “அல்லாஹ்வே! எங்களது குறைகளை மறைத்திடுவாயாக! எங்களது அச்சத்தை அகற்றிடுவாயாக!”

போர் இவ்வாறே தனது உச்சத்தை எட்டியிருந்தது. மக்கத்து குறைஷியர்களும் அவர்களுடைய நட்புக் கோத்திரங்களும் இப்பொழுது நீண்ட கால முற்றுகையால் நொந்து போயிருந்தார்கள். மிக விரைவாக ஏதாவது முடிவான தாக்குதல் தொடுத்து முஸ்லிம்களை அழித்து விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். நிராகரிப்பாளர்களின் தலைவர்கள் இந்த நுட்பமான செயல்திட்டத்தை வகுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், மறுபுறம் மேலான இறைவன் அவர்களுடைய எண்ணங்களை மண்ணோடு மண்ணாக்க முடிவு செய்து விட்டிருந்தான்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** நுயைம் பின் மஸ்ஊது எனும் ஒருவர் ஃகத்ஃபான் கோத்திரத்தின் கிளைக் கோத்திரமான, அந்தப் போரில் முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் புரிந்து கொண்டிருந்த அஷ்ஜஃ கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தார். ஆனால், இந்த நபர் உள்ளத்தால் முஸ்லிம் ஆகி விட்டிருந்தார். ஆனால், அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார் என்பதை நிராகரிப்பாளர்கள் அறிந்திருக்கவில்லை. அதிலிருந்து அவர் எப்படி பயனடைந்தார் என்றால், ஒரு நாள் இவர் மதீனாவுக்கு வந்து விட்டார். எல்லாவற்றிற்கும் முதலாக பனு குறைஸா கோத்திரத்திடம் சென்றார். பனூ குறைஸாவின் தலைவர்களுடன் நுயைமுக்குப் பழைய தொடர்புகள் இருந்தன என்பதனால், அவர் பனூ குறைஸாவின் தலைவர்களிடம் இவ்வாறு கூறினார்:

“நீங்கள் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்து விட்டு குறைஷியர்களுடனும், ஃகத்ஃபான் கோத்திரத்துடனும் இணைந்து கொண்டது சரியல்ல என்று நான் நினைக்கிறேன். அவ்விரு பிரிவினரோ இங்கு மதீனாவில் சில நாள்களுக்கு விருந்தாளிகள் ஆவார்கள். ஆனால், எந்நிலையிலும் நீங்கள் இங்குதான் இருந்தாக வேண்டும். குறைஷியர்களும் ஃகத்ஃபான் கோத்திரத்தினரும் இங்கிருந்து செல்லும் போது, முஸ்லிம்கள் உங்கள்மீது கருணை காட்டினால் காட்டட்டும் என்று உங்களை விட்டுச் சென்று விடுவார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எனவே, உங்களுடன் எந்த நம்பிக்கை துரோகமும் செய்யப்படாது என்று உங்களுக்கு

மனநிறைவு இருப்பதற்காக, குறைந்தபட்சம் குறைஷியர்களும் ஃகத்ஃபான் கோத்திரத்தினரும் அவர்களுடைய சில மனிதர்களைப் பணயமாக உங்களிடம் ஒப்படைத்து விடும் வண்ணமாவது செய்து விடுங்கள்."

இதற்குப் பிறகு, நுயைம் பின் மஸ்ஊது குறைஷியர்களிடம் சென்று அவர்களிடம், "பனூ குறைஸா கோத்திரத்தினர் (நீங்கள் கைவிட்டு விடுவீர்களோ என்று) உங்களைக் குறித்து அஞ்சுகின்றனர். மேலும், உங்களுடைய சில ஆட்களைப் பணயமாக ஆக்க நினைக்கிறார்கள். ஆனால், நீங்கள் ஒருபோதும் அவ்வாறு செய்யக்கூடாது."

இவ்வாறே அவர் ஃகத்ஃபான் கோத்திரத்திடமும் இதே போன்று பேசினார். இப்பொழுது இறைவன் என்ன நிகழச் செய்தான் என்றால், அந்த நாள்களிலேயே குறைஷியர்களும், ஃகத்ஃபான் கோத்திரத்தினரும் முஸ்லிம்கள் தங்களது எண்ணிக்கை குறைவு காரணமாக எதிர்த்துப் போட்டியிட முடியாத வகையில், முஸ்லிம்கள் மீது நாலாப்புறத்தில் இருந்தும் ஒரே நேரத்தில் தாக்குதல் தொடுக்க வேண்டும்; எங்காவது அவர்களது வரிசை உடைந்து தாக்குதல் தொடுப்பவர்கள் எளிதாக மதீனாவுக்குள் நுழைய முடிய வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தத் தீர்மானத்திற்கேற்ப அவர்கள் பனூ குறைஸாவுக்குத் தூது அனுப்பினார்கள். அதற்கு அவர்கள், 'நாளையோ எங்களுக்கு சப்த் நாளாகும் (சனிக்கிழமையாகும்). எனவே, நாங்கள் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம். அது மட்டுமின்றி, நீங்கள் உத்தரவாதத்திற்கு, உங்களுடைய ஆட்கள் சிலரை எங்களிடம் ஒப்படைக்காத வரை, எங்களால் இந்தத் தாக்குதலில் கலந்து கொள்ள முடியாது' என்று பதில் அளித்தார்கள்.

இந்த விஷயம் முன் வந்ததும், இருபுறமும் நுயைம் கூறிய விஷயம் உண்மை என்று கருதப்பட்டது. இருபுறமும் ஒருவர் மற்றவர் மீது கோபம் கொண்டனர். ஃகத்ஃபான் கோத்திரத்தினரும் குறைஷியர்களும், 'நீங்கள் வர வேண்டும் என்றால், அப்படியே வாருங்கள்; நாங்கள் பணயமாக ஆட்களை எல்லாம் தர மாட்டோம்' என்று தூது அனுப்பினார்கள். இதனால் ஃகத்ஃபான் கோத்திரத்தினர் மற்றும் குறைஷியர்களின் எண்ணம் தூயதாக இல்லை என்று பனூ குறைஸாவுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. இவ்வாறு நுயைம் உடைய இந்தத் திட்டம் வெற்றியடைந்தது.

பிறகு ஒருநாள் முஸ்லிம்களுக்கு சாதகமாக அல்லாஹ்வின் நியதி வேகமான புயல் வடிவத்திலும் வெளிப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு: மேலான அல்லாஹ் கடும் குளிரான ஓர் இரவில் எத்தகைய வலுவான சூறாவளியை அனுப்பினான் என்றால், அது நிராகரிப்பாளர்களின் அடுப்புப் பானைகளைக் கவிழ்த்து விட்டது. பாத்திரங்களைத் தூக்கி வீசி விட்டது. அந்த சூறாவளி நிராகரிப்பாளர்களுடைய கண்களை அடைத்து விட்டது. அவர்களிடம் பலவீனத்தையும் கோழைத்தனத்தையும் நுழைத்து விட்டது. இணைவைப்பாளர்கள் பின்வாங்கி விட்டார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் அச்சுறுத்தும் புயலைப் பற்றி விளக்கமாகக் கூறிய பின் இவ்வாறு கூறுகிறார்கள்:** அரேபியாவின் தொன்மையான வழக்கப்படி மிகவும் பேணிக்காத்தவாறு ஆங்காங்கே இரவு நேரத்தில் மூட்டப்பட்டிருந்த சமுதாயத் தீ அணைய ஆரம்பித்து விட்டது. அந்தத் தீ அணைந்து விடக்கூடாது என்று அவர்களுக்குப் பெரும் கொள்கைப் பிடிப்பு இருந்தது. ஏற்கனவே வேதனையளிக்கும் முற்றுகையின் நீட்டம் மற்றும் ஒற்றுமையின் பரஸ்பர நம்பிக்கையின்மையின் கசப்பான அனுபவங்களால் நிராகரிப்பாளர்களுடைய உள்ளங்கள் ஆட்டங்கண்டு கொண்டிருந்தன. கற்பனைகளைப் பின்பற்றி வந்த அவர்களுடைய உள்ளங்களுக்கு அந்தக் காட்சிகள் தந்த அதிர்ச்சியால் அவர்களால் சுதாரித்துக் கொள்ளவே முடியவில்லை. இதனால் பொழுது புலர்வதற்கு முன்பே காஃபிர்களின் படைகள் எனும் தூசு துகள்களை விட்டும் மதீனாவின் கீழ்வானம் தூய்மையாகி விட்டது.

சூறாவளி வலுபிடித்த போது, அபூசுஃப்யான் அக்கம்பக்கம் இருந்த குறைஷிய தலைவர்களை அழைத்து, ‘நம்முடைய சிரமங்கள் மிகவும் அதிகரிக்கின்றன. இப்பொழுது இங்கு அதிகம் தங்குவது பொருத்தமானதல்ல. எனவே, நாம் திரும்பிச் செல்வது சிறந்ததாகும். எவ்வாறாயினும், நான் செல்கிறேன்’ என்று கூறினார். இதைக் கூறிவிட்டு அவர் தன் ஆட்களுக்குத் திரும்பிச் செல்லக் கட்டளையிட்டார். பிறகு தனது ஒட்டகத்தின் மீது பயணமானார். ஆனால், பதற்றத்தின் நிலை எப்படி இருந்தது எனில், ஒட்டகத்தின் கால்களை அவிழ்க்க வேண்டும் என்பது அவருக்கு நினைவிருக்கவில்லை. ஏறி அமர்ந்த பிறகு ஒட்டகம் அசையாததனால், அது அவருக்கு நினைவுக்கு வந்தது.

அப்பொழுது அபூ ஜஹ்லின் மகன் இக்ரிமா சற்று கசப்பான தொனியில், ‘அபூசுஃப்யான் நீர் படையின் தலைவர் ஆவீர். படையை விட்டு விட்டு ஓடுகிறீரே? உமக்கு படையைப் பற்றிய அக்கறைக்கூட இல்லையே!’ என்று கூறினார். இதனால் அபூசுஃப்யான் வெட்கமடைந்து, ஒட்டகத்திலிருந்து இறங்கி, ‘இதோ! நான் போகவில்லை. ஆனால், நீங்கள் விரைவாக ஆயத்தம் மேற்கொள்ளுங்கள்’ என்று கூறினார்.

இதற்குப் பிறகு, மற்ற கோத்திரங்களுக்கு அவர்கள் ஓடிப்போன தகவல் கிடைக்க கிடைக்க அவர்களும் வேக வேகமாகத் திரும்பிச் செல்ல ஆயத்தம் மேற்கொள்ளத் துவங்கி விட்டனர். பனூ குறைஸா கோத்திரத்தினரும் தங்களுடைய கோட்டைகளுக்குள் திரும்பிச் சென்று விட்டனர். அவர்களுடன் சேர்ந்து பனூ நஸீர் கோத்திரத்தின் தலைவன் ஹுயய் பின் அக்தபும் அவர்களுடைய கோட்டைகளுக்குள் சென்று விட்டான். காலைப் பொழுதின் வெண்மை வெளிப்படுவற்கு முன்பே முழு மைதானமும் காலியாகி விட்டது. மேலும், உடனடியான மற்றும் சிந்தனைகளை வியப்பில் ஆழ்த்தக்கூடிய ஒரு மாற்றமாக, முஸ்லிம்கள் தோல்வியடையவே இருந்து வெற்றியாளர்கள் ஆகி விட்டார்கள்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நிராகரிப்பாளர்கள் பின்வாங்கிய தகவல் கிடைத்ததும், பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள். மேலும், 'இது நமது எந்தவொரு முயற்சியின் விளைவும் அல்ல; மாறாக, அல்லாஹ்வின் அருளால் மட்டுமே நிகழ்ந்துள்ளது. அவன் தனது ஆற்றலால் கூட்டங்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டான்' என்று கூறினார்கள்.** இதற்குப் பிறகு, நிராகரிப்பாளர்கள் ஓடிப் போன செய்தி முஸ்லிம்கள் மத்தியில் பிரசித்தி பெற்று விட்டது.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மற்ற விபரங்களை இனி எடுத்துரைப்பதாகக் கூறிய பிறகு, உலகின் தற்போதைய நிலைமைக்காக துஆவின் பக்கம் கவனமூட்டியவாறு கூறினார்கள்:* உங்கள் அனைவருக்கும் தெரியும்! உலகத்தின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே செல்கிறது. அழிவின் பக்கம் செல்கிறது. அமெரிக்காவும் வல்லரசுகளும் நீதியுடன் செயல்பட விரும்பவில்லை. போர் விரிவடைந்து கொண்டே செல்கிறது. மேலான அல்லாஹ் அஹ்மதிகளையும் குற்றமற்றவர்களையும் இதன் அச்சமூட்டக்கூடிய மற்றும் தீய தாக்கங்களிலிருந்து காப்பாற்றுவானாக!

இதற்காக நாம் அல்லாஹ்வுடன் தொடர்பை அதிகரித்துக் கொள்ள வேண்டி வரும். துஆக்களின் பக்கம் மிக அதிகம் கவனம் செலுத்த வேண்டி வரும். ஒவ்வோர் அஹ்மதியும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். பாக்கிஸ்தானில் அஹ்மதிகளுடைய நிலைமைகள் மிக அதிகமாக மோசமாகிக் கொண்டே இருக்கின்றன. அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். வங்காள தேசத்தின் அஹ்மதிகளின் நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அந்த மக்கள் மீதும் மிகவும் கடுமைகாட்டப்படுகிறது. மேலான அல்லாஹ் எல்லார் மீதும் கருணையும் அருளும் புரிவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)